கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், புதிதாக சொந்தக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

37—

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

***53309—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், குமாரமங்கலம் கிராமத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த அவையில் எதிர்க்கட்சி வரிசையைப் பாருங்கள். ஓர் எதிர்க்கட்சி உறுப்பினர்கூட இல்லை. அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எதிரிகளே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையில் எதிர்க்கட்சிக்கு வருங்காலங்களிலும் இடமில்லை என்பதற்கான அடையாளம் இது. எடப்பாடியார் அவர்களின் மக்கள் நலத் திட்டங்களுக்கான அதிரடி அறிவிப்புகளைக் கண்டு, பயந்து, மிரண்டுபோய் ஓட்டம் பிடித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் சிங்கமாக இந்த அவைக்குள்ளே வருகிறார்களென்றால், சிதறி ஓடியவர்கள், அம்மாவின் சிங்கக்குட்டி எடப்பாடியாரின் எதிரே அமர, உட்கார பயந்து

2021 பிப்ரவரி 26]

ஓட்டம் பிடித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் தோல்வி இப்போதே அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. அதனால்தான் அவையைப் புறக்கணித்திருக்கிறார்கள். மக்களின் தேவையை அவையில் எடுத்துச் சொல்ல வேண்டிய கடமையைச் செய்யத் தவறிவிட்டவர்களை மக்களும் புறக்கணிப்பார்கள். எதிர்க்கட்சிகள் கேட்டால் என்ன, கேட்காவிட்டால் என்ன, அதற்கு அவசியமே இல்லை என்று அண்ணன் எடப்பாடியார் அவர்கள், சாதித்துக் கொண்டிருக்கிறார்கள்; செய்துகொண்டிருக்கிறார்கள்; அறிவிப்பை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை உடனடியாக அரசாணையாக்கி, நிதி தந்து, அரசாணையை அப்போதே அமல்படுத்தி, செயல்படுத்தி, மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுபோய்ச் சேர்க்கிறார்கள். மக்கள், எடப்பாடியார் வாழ்க என்கிறார்கள். இவரே வருங்கால முதல்வர் என்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தமிழகத்தில் எதிர்க்கட்சிகளுக்கு இனி வாய்ப்பே இல்லை; வழியே இல்லை; வேலையே இல்லை.

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், குமாரமங்கலம் கிராமத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு திருத்தணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டு விட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். நான் நித்தம் நித்தம் வணங்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள், நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியத்தில், குமாரமங்கலம் கிராமத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்க ஆணையிட்டமைக்கு மாண்புமிகு தமிழ்நாடு

[2021 பிப்ரவரி 26

முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதியின் சார்பில் நன்றியினையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்துத் துறைகளிலும் பல விருதுகளைப் பெற்று, சாதனை படைத்ததும், எதிலும் புதுமையும், புரட்சியும் படைப்பதும், அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான். அதனால்தான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தொடர்ந்து, 2021 சட்டமன்றப் பொதுத் தேர்தலில், 3–வது முறையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டில் உள்ள ஏழையெளிய நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பினைக் கொடுக்க வேண்டுமென்பதற்காக, பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகையின்போது உதவிகள் வழங்க, 1983 ஆம் ஆண்டு, இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. பி.எம். நரசிம்மன்: அதே வழியில் ஏழை, எளிய நெசவாளர்களுக்கு பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை முதல் முதலில் தொடங்கி வைத்த பெருமை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. நான் சார்ந்திருக்கின்ற திருத்தணி தொகுதியில் சில கிராமங்களில் நெசவாளர்கள் பெருமளவில் வாழ்கின்றனர். அங்கெல்லாம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்க வேண்டுமென்று மனு செய்துள்ளனர். எப்படி மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள், குமாரமங்கலம் கிராமத்திற்குச் சிறப்பான திட்டத்தைக் கொடுத்தாரோ, அதேபோன்று, தேவையையும், அவசியத்தையும் கருதி, மனு செய்துள்ள சீயாப்பட்டறை, அத்திமாஞ்சேரிபேட்டை, மேல்மோசூர், அம்மையார்குப்பம் மற்றும் கோணசமுத்திரம் போன்ற கிராமங்களில்கூட கூட்டுறவுச் சங்கங்கள் வேண்டுமென்று கோரிக்கை வரப்பெற்றுள்ளது. எனவே, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள், இந்தக் கிராமங்களில் புதிய கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

2021 பிப்ரவரி 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பைப் பெருக்க வேண்டும், நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் உயரிய இலட்சியமாகும். அந்த இலட்சியத்தை நிறைவேற்றுகின்ற வகையில், எத்தனை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு முடியுமோ, அத்தனை கூட்டுறவுச் சங்கங்களையும் அமைத்துக் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது. அதனால், கூட்டுறவுச் சங்க விதிகளின்படி அதற்கான முன்மொழிவுகள் வரப்பெறும் என்று சொன்னால், எத்தனை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை வேண்டுமானாலும் அமைத்துக் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வேண்டுமானாலும் அதனைப் பதிவு செய்து கொடுப்பதற்கு அம்மாவினுடைய அரசு தயாராக இருக்கிறது என்ற நல்ல பதிலைத் தந்திருக்கிறார்கள். அதற்காக தொகுதி மக்களின் சார்பில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகலந்த வணக்கத்தை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

கைத்தறித் துறையானது தமிழ்நாட்டில் அதிகமான வேலைவாய்ப்பு அளிக்கும் திறன் கொண்ட துறையாகும். COVID *19 ஊரடங்கு காலத்தில்கூட 1.58 இலட்சம் நெசவாளர்களுக்கு தலா 2,000 ரூபாய் வழங்கி, ஏழைகளின் வாழ்வில் ஒளி விளக்கேற்றி வைத்தவர் சேலத்துத் தங்கம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அன்பு அண்ணன் எடப்பாடியார் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்திற்கு 15 நாட்களுக்கு முன்பு வந்தார்கள். மக்களைத் தேடி அரசாங்கம் என்கிற நல்ல கோட்பாட்டிற்கேற்ப, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அன்பு அண்ணன் எடப்பாடியார்*

அவர்கள், மக்கள் கோரிக்கை வைக்காமலேயே நெசவாளர்களை சந்தித்தார்கள். அப்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடத்தில் நெசவாளர்கள் ஒரு சில கோரிக்கைகளை வைத்தார்கள். நான் சார்ந்திருக்கின்ற திருத்தணி தொகுதியில் பொதட்டூர்பேட்டை மற்றும் அம்மையார்குப்பம் போன்ற கிராமங்களில் அரசே முன்வந்து ஜவுளிப் பூங்கா தொடங்க வேண்டுமென்கின்ற கோரிக்கையை வைத்தார்கள். எனவே, நான் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களிடத்தில், பொதட்டூர்பேட்டை மற்றும் அம்மையார்குப்பம் ஆகிய கிராமங்களில் அரசே முன்வந்து ஜவுளிப் பூங்கா தொடங்குமா என வினவ முற்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவுளிப் பூங்கா அமைப்பதில் மூன்று விஷயங்கள் இருக்கின்றன. மத்திய அரசின் நிதியுதவி, மாநில அரசின் நிதியுதவி மற்றும் அங்கு தொழில் செய்ய முன்வருவோருடைய நிதியுதவி. இந்த மூன்று நிதியும் ஒருங்கிணைக்கப்பட்டால்தான் ஜவுளிப் பூங்கா அமைக்க முடியும். மத்திய அரசு 40 சதவீத மானியம் தருகிறது. மாநில அரசு 9 சதவீத மானியம் தருகிறது. 51 சதவீத நிதியை தொழில் செய்ய முன்வருவோர்கள், தாமாகவோ அல்லது வங்கிகளில் கடன் பெற்றோ அதற்கான மூலதனத்தை தர வேண்டும். அப்படி அவர்கள் முன்வருவார்களென்று சொன்னால், கண்டிப்பாக ஜவுளிப் பூங்கா தொடங்குவதிலே அரசுக்கு எந்தத் தடையும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 38, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.